Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.8**

Defence

Court

| | |
|---|---|
| Name | ஜெயபால் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கீழக்கொல்லை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்த ஞானசெல்வம் எனது தம்பி. எதிரி உக்கிரவேலுக்கும் எனது தம்பிக்கும் அடிக்கடி பிரச்சினை நடந்து வந்தது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எனது தம்பி உக்கிரவேலு தலையில் அ டித்து விட்டதாக கேள்விப்பட்டு கடலூர் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். சிகிச்சைக்காக எனத தம்பியை புதுச்சேரி ஜிபமர் மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜுவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சென்னையில் எனது தம்பி இறந்து விட்டதாக தகவல் கிடைத்தது. மறுநாள் எனது தம்பி பிரேதம் அவருடைய வீட்டிற்கு வந்தது. இறந்த எனது தம்பியின் பிரேதத்தை எதிரி உக்கிரவேலு வீட்டு வாசலில் வைத்து நியாயம் கேட்டோம். என் தம்பி மனைவி முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். என் தம்பியின் பிரேதத்தை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு சென்றேன். அங்கு ஆய்வாளர் பிரேத விசாரணை என் முன்னிலையில் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் தேதியில் இருந்து 3 மாதங்கள் கழித்து எனது தம்பி இறந்தார். என் தம்பி இறப்பதற்கு முன்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனது வீடு கும்பகோணம் மெயின் ரோடு கொள்ளுக்காரன் குட்டையில் தான் எப்போதும் உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரிகளின் வீட்டு வாசல் தெற்கு பார்த்தவாறு உள்ளது. எதிரிகளின் வீட்டிற்கு தெற்கு பக்கம்

எனது தம்பி வீடு கிடையாது என்றால் சரிதான். எனது தம்பி இறந்த பிறகு பணமும், நிலமும் நாங்கள் எதிரிகளை எழுதிக்கொடுக்கும் படி சொன்னதை தான் நியாயம் கேட்டதாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த விவரம் எனக்கு முன்பாகவே தெரிந்து இருந்தால் போலிசார் என்னை என் தம்பி இறப்பதற்கு முன்பாக விசாரித்து இருப்பார்கள் என்றாலும் எனக்கு எந்த விவரமும் சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*